# ஸ்ரீ அனுமன் நாற்பது (ஹனுமான் சாலிசா)

## Sri Hanuman Chalisa

தமிழ் கவிதை வடிவில்...

பி. ஸ்ரீதேவிபிரசாத்

psdprasad.music@gmail.com

டிசம்பர் - 2017



திருமதி. எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்கள் பாடிய அதே ட்யூனில், தமிழில் அமையுமாறு எழுதப்பட்டது.

ஸ்ரீகுரு பதங்களின் தூளிகையாலே
என்மன மாசுகள் துடைத்தேனே !
பயன்கள் நான்கையும் நமக்களிக்கும்...
ஸ்ரீ..ராமனின் புகழ் பாட...

வாயு மைந்தனேஉனை வேண்டினேன்..! வேறெதும் அறியா மூடன்நான் !
பலமோடு ஞானம் தந்தருள்வாயே ! பவவினை தீர்த்தருள்வாயே !

ஞானத்தின் கடலே ! ஹனுமனே போற்றி !
வானர தேவா ! உலகத்தின் ஒளியே ! (1)

ராம தூதனே ! அதி பல சாலியே !
அஞ்சனை மைந்தனே ! வாயுவின் தனையா ! (2)

மஹாவீரனே ! வஜ்ர தேகனே !
அல்லவை தீர்த்து நல்லதே சேர்ப்பாய் ! (3)

பொன்நிற மேனியும் கண்களில் மின்ன...
குண்டலம் ஆடிடும், சுருள் முடி அழகா...! (4)

தோளில் முப்புரி நூல் படர்ந்தது ஓட...
கொடியும், இடியும் உன் கரங்களில் ஏந்த... (5)

சங்கரன் அம்சமே ! கேசரி மைந்தனே !
உன் தீர பராக்ரமம்...உலகே போற்றுமே ! (6)

நற்குண சீலா ! பேரறிவாளா !
ராம சேவையே உன்நினைவாகும் ! (7)

ராம சரிதமே கேட்டுநீ ரசிப்பாய் !
சீதா ராமனுன் நெஞ்சிலே வசிப்பார் ! (8)

ராம லட்சுமண ஜானகி...ஜெயமே உனக்கு மாருதி !

சிறிய உருவெடுத்து சீதைமுன் நின்றாய் !
விஸ்வ ரூபமாய் லங்கையை எரித்தாய் ! (9)

பீம ரூபத்தில் அசுரரை அழித்தாய் !
ராம சந்திரனின் பணிகளை முடித்தாய் ! (10)

லட்சுமணன் உயிர்த்தெழ மலையினைக் கொணர்ந்தாய் !
ஆனந்த ராமனும் உனை அணைத்தானே ! (11)

ராமனே உந்தன் புகழுறைத் தானே !
பரதன் போல் நீயும் சோதரன் என்றே ! (12)

ஆதி சேஷனும் உன்புகழ் சொல்வான் !
என்று சொல்லியே ராமனும் தழுவ...(13)

ப்ரம்மனும், தேவரும், சனகரும், முனிவரும்
நாரதர், சரஸ்வதி, ஆதி சேஷனும்.. (14)

எமன், குபேரன், திக்பா லகரும்..
உன்னருட் பெருமை சொல்லவே திகைத்தார் ! (15)

தனது ராஜ்ஜியம் சுக்ரீவன் அடைய...
ராமனைக் காட்டியே நீ அருள் செய்தாய் ! (16)

ராம லட்சுமண ஜானகி...ஜெயமே உனக்கு மாருதி !

உன்னருளால் தான் வீடணன் கூட
லங்கையின் மன்னன் ஆனதை அறிவோம் ! (17)

பல மைல் தாண்டி கதிரவன் தன்னை
பழமென விழுங்கிய பலவான் நீயே ! (18)

ராம முத்திரை மோதிரம் வாயில்..
தாங்கி சென்றாயே ! கடலினைத் தாண்டி...! (19)

இயலாதெதுவும் உண்டோ உனக்கு?
மலையும் கூட மடுவென ஆகும்..! (20)

ராம ராஜ்யத்தின் காவலன் நீயே !
உன்னருள் இன்றி...யாரங்கு வருவார்? (21)

உன்பதம் சரணே என்போர்க் கின்பமே !
உன்னருள் இருக்க பயமிலை என்றுமே ! (22)

உன்பலம் அதுவே உனக்கே தெரியும் !
உலகம் மூன்றுமுன் பெருமையைப் போற்றும் ! (23)

உன் திருநாமமே நாவினில் போதும்...!
தீண்டக் கூடுமோ தீவினை ஏதும்...! (24)

ராம லட்சுமண ஜானகி...ஜெயமே உனக்கு மாருதி !

தினம் உன்நாமம் ஜபமென சொன்னால்...
பிணிகள் நீங்குமே...வலிகளும் நீங்கும்... (25)

மனம், மொழி, செயலால் உன் திரு நாமம்...
த்யானம் செய்தால் துன்பமும் நீங்கும் ! (26)

தவ வேந்தவனாம் ஸ்ரீரகு ராமன்...!
அவன்பணி முடிக்கும் நீ அருட் சேவகன்...! (27)

அடியவர்க் கருள் தரும் கற்பகம் நீயே !
அடிபணிந்தே தொழும் அற்புதம் நீயே ! (28)

நான்கு யுகங்களும் உன்புகழ் ஒலிக்கும் !
உலகம் முழுதுமே உன்புகழ் ஜொலிக்கும் ! (29)

தேவர், முனிவரைக் காத்திடும் தேவா !
அசுரரை அழித்திடும் ராமனின் தூதா ! (30)

அஷ்ட சித்தி, நவ நிதியும் அருளே !
அன்னை ஜானகி அருளிய வரமே ! (31)

நீயே ராம பக்தியின் சாரம் !
எப்போது மேநீ ராமனின் தாசன் ! (32) (31, 32)

ராம லட்சுமண ஜானகி...ஜெயமே உனக்கு மாருதி !

உன்புகழ் பாடி ராமனை சேர்வோம் !
ஜென்ம ஜென்மத்து பாவங்கள் தீர்ப்போம் ! (33)

இறுதியில் அவனடி சேர்ந்திடும் போது
ஹரி பக்தனிவன் எனும் பெயர் போதும் ! (34)

உன்னை வேண்டினால் போதும் ஹனுமானே !
ஏனைய தெய்வங்கள் மனம் மகிழ்வாகும் ! (35)

உன் திரு நாமத்தை சொல்லிடுவோர்க்கு
துன்பங்கள் விலகும் ஜெய ஹனுமானே ! (36)

ஜெய்...ஜெய்..ஜெய் ஹனுமானே ! (2)
தயை புரிந்து உன் அருளொளி தாராய் ! (37)

நூறு தடவை இதை படித்திடுவோர்க்கு
வாட்டிடும் பந்தம் அறுபடும் ! நலம் மிகும் ! (38)

பக்தியாய் இந்த ஹனுமன் சாலீசா
படித்திடுவோர்கள் பரமனைச் சேர்வார் ! (39)

துளசிதாசன் ஹரி சே வகனே !
நாதா ! எந்தன் இதயத்தில் உறைவாய் ! (40)

ராம லட்சுமண ஜானகி...ஜெயமே உனக்கு மாருதி !